# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**மனு எண். 678/நகராட்சி/2019**
**நாள் : 29/07/2019**

| | | |
|---|---|---|
| **எடப்பாடி நகராட்சி வீடு வாடகைக்கு விடும் உரிமையாளர்கள் சார்பாக தாக்கல் செய்யப்பட்டமனு** | – | **மனுதாரர்** |
| **திரு N. செங்கோட்டுவேலு, இளநிலை உதவியாளர், எடப்பாடி நகராட்சி** | – | **எதிர் மனுதாரர்** |

சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சி வீடு வாடகைக்கு விடும் உரிமையாளர்கள் சார்பாக 06.06.2019 அன்று மின்னஞ்சல் மனு ஒன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டது. அம்மின்னஞ்சல் மனு மீது எடப்பாடி நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## <u>ஆணை</u>

சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சி, வீடு வாடகைக்கு விடும் உரிமையாளர்கள் சார்பாக அனுப்பப்பட்ட மின்னஞ்சல் மனுவில் எடப்பாடி நகராட்சியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திரு N. செங்கோட்டுவேலு குறித்து கீழ்க்காணும் புகார் தெரிவிக்கப்பட்டிருந்தது :-

(1) புதிதாக சொத்துவரி விதிக்கப்படும் கட்டடங்களின் பரப்பளவை குறைத்து பதிவு செய்வது ;

(2) குறைந்த அளவிலான சொத்துவரி விதிப்பதற்கும், தொழில்வரி விதிப்பதற்கும் கையூட்டு பெறுவது ;

(3) சொத்துவரி மற்றும் தொழில்வரி குறைத்து வசூலிப்பதால் நகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படுவது.

2. மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் குறித்து எடப்பாடி நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள திரு N. செங்கோட்டுவேலு என்பவர் எடப்பாடி நகராட்சியில் இளநிலை உதவியாளராகப் பணி புரிகிறார் என்றும், சொத்துவரி தொடர்பான

கோரிக்கைகள் குறித்த விண்ணப்பங்களை வருவாய் உதவியாளர்களுக்கு அனுப்பி அதன்மீது நடவடிக்கை எடுத்து முடிந்ததும் அவற்றை திரும்பப் பெற்று கோப்புகளை முடித்து வைப்பதே அவரது பணி என்றும், இவரது பணிக்கும் சொத்துவரி விதிப்பது சம்பந்தமான புகாருக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்று ஆணையாளர் தெரிவித்துள்ளார். மேலும், முகவரியின்றி யாரோ ஒருவரால் புகார்மனு அனுப்பப்பட்டுள்ளதென்றும் புகார்கள் அனைத்தும் உண்மைக்குப் புறம்பானவை என்றும் தெரிவித்துள்ளார். எனவே, மேற்படி ஆணையாளரின் அறிக்கையை ஏற்று எடப்பாடி நகராட்சியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திரு N. செங்கோட்டுவேலு என்பவருக்கு எதிரான முறையீட்டின் மீதான மேல்நடவடிக்கையை கைவிடலாம் என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு, ஜூலைத் திங்கள், 29–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

நகராட்சி ஆணையர்,
எடப்பாடி நகராட்சி,
எடப்பாடி,
சேலம் மாவட்டம், .

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி